1971 டிசம்பர் 17]

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: தலைவர் அவர்களே, அப்போதும் அப்படித்தான் பல புகார்கள் வந்தன. எனவே, அதிர்ஷ்டம் உள்ளவர்களுக்குக் கிடைக்கட்டுமே என்பதற்காகத்தான் சீட்டுக் குலுக்கிப் போட்டு, விசைப்படகுகளை வழங்குகிறோம்.

திருமதி ஜோதி வெங்கடாசலம்: தலைவர் அவர்களே, 'யான்மார்' படகுகளைத்தான் மக்கள் விரும்புகிறார்கள். யான்மார் கொடுக்கப்படுவது நிறுத்தப்பட்டது என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அப்படி நிறுத்தி வைக்கப்பட்டதற்கான காரணம் என்ன? மக்கள் எதை விரும்பி வாங்குகிறார்களோ அதைக் கொடுப்பதுதானே நியாயம். மீண்டும் யான்மார் படகு கொடுக்க முயற்சி எடுத்துக்கொள்ளுமா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: தலைவர் அவர்களே, 'யான்மார் இறக்குமதி செய்யப்படுவது நிறுத்தப்பட்டிருக்கிறது. 'யான் மார்' படகு ஜப்பான் கொலாபரேஷனுடன் எண்ணூரில் கட்டலாமா என்கிற யோசனை நீண்டகாலத்திற்கு முன்னால் இருந்து மத்திய அரசாங்கத்தின் ஒப்புதல் கிடைக்காததால் அது நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. மீண்டும் நம்முடைய அரசு அதுபற்றி முயற்சி எடுத்து வருகிறது. தற்போது யான்மார் படகு இறக்குமதி நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

* 511 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், நாகையில் உள்ள மீன்பிடி விசைப்படகுக் கட்டும் நிலையத்தை விரிவுபடுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: ஆம்.

தருமபுரி மாவட்ட அரிசன கூட்டுறவு பேருந்து போக்குவரத்து நிறுவனம்

* 512 வினா—டாக்டர் ச. அ. சின்னராசு: மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்ட அரிசன கூட்டுறவு பஸ் போக்குவரத்து நிறுவனத்திடமிருந்து, கடன் கோரி அரசுக்கு மனு ஏதேனும் வந்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: (அ) & (இ) இல்லை. ஆனால் தருமபுரி மாவட்ட அரிசன கூட்டுறவு பஸ் போக்குவரத்து நிறுவனத்திற்காக கீழ்க்கண்ட உதவிகள் கோரி ஒரு கோரிக்கை மாநில கூட்டுறவு பதிவாளரிடமிருந்து, 7—3—1971-ல் அரசுக்கு அந்தது:

(1) மூன்று பேருந்துகள் வாங்குவதற்காக நீண்டகால வட்டியுடன் கூடிய கடன் ரூ. 2,00,000.

(2) கருவிகள் வாங்குவதற்காகவும், தொழிற்கூடம் கட்டுவதற்காகவும் அரசின் பங்குத் தொகை ரூ. 50,000.

(3) நிறுவனத்தின் செயலாளராகப் பணிபுரிய ஒரு கூட்டுறவுத் துணைப் பதிவாளரின் சேவை (அரசின் செலவில்).

(4) பங்குத் தொகைக்காகவும் நெருக்கடி நிதிக்காகவும் ரூ. 20,000.

இந்த கோரிக்கையைப் பரிசீலனை செய்தபிறகு அரசு கீழ்க்கண்ட நிதி உதவிகளை மட்டும் அளிக்க அண்மையில் ஆணையிட்டுள்ளது :—

(1) மூன்று பேருந்துகள் வாங்குவதற்காக வட்டியுடன் நீண்டகால கடன் ரூ. 1,90,000.

(2) அரசின் பங்குத்தொகை ரூ. 10,000.

(3) நிறுவனத்தின் செயலாளராகப் பணி புரிய அரசுப் பொறுப்பில் ஒரு கூட்டுறவு துணைப் பதிவாளரின் சேவை (ஓராண்டு காலத்திற்கு).

பள்ளிப்பட்டு துணை வட்டத்தில் அரிசனக் குடியிருப்பு

***513 வினா—திரு. இ. எஸ். தியாகராசன்** : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு மாவட்டம், பள்ளிப்பட்டு துணை வட்டத்தில் உள்ள வெளி அகரம் அரிசனக் குடியிருப்பைச் சேர்ந்த அரிசனங்களுக்கு 20 வீடுகள் கட்டிக் கொடுப்பதற்கு 1962–63-ல் அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளதா ?

(இ) ஆம் எனில், கட்டுமான வேலை முடிந்து விட்டதா ? கட்டட வேலை செய்தவர்களுக்குத் தொகை முழுவதும் கொடுக்கப்பட்டதா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. இ. எஸ். தியாகராசன் : தலைவர் அவர்களே, பள்ளிப்பட்டு துணை வட்டத்திலே உள்ள வெளி அகரத்திலே கட்டப்பட்ட அரிசனக் காலனிகள் குட்டிச்சுவராக இருந்துகொண்டிருக்கின்றன, அதன் காரணம் என்ன என்பதை அறியலாமா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : தலைவர் அவர்களே, ஏற்கனவே 1964-ஆம் ஆண்டிலே இந்தக் கிராமத்தில் 12 வீடுகள் கட்டப்பட வேண்டுமென்று தனியார் ஒருவருக்குக் கட்டுவதற்கு ஒப்பந்தங்கள் தரப்பட்டு இருந்தன, ஆனால் அவர் பாதியளவில் கட்டடங்கள் கட்டிவிட்டு பாதியில் நிறுத்தி விட்டுவிட்டார். ஆயிரம் ரூபாய் ஒரு வீட்டுக்கு நல இலாகா மூலமாகத் தரப்படவேண்டுமென்று ஏற்பாடு செய்யப்பட்டு இறுதியிலே நிறுத்தி வைக்கப் பட்டிருக்கிறது. 1966-ஆம் ஆண்டிலே பெய்த பெருமழை, புயலின் காரணமாக பாதியளவில் கட்டப்பட்டிருந்த வீடுகள் இடிந்துவிட்டன. இன்னும் அவற்றைக் கட்டுவதற்கு ஏற்பாடுகள் எதுவும் செய்யவில்லை.

திருமதி த. ந. அனந்தநாயகி : தலைவர் அவர்களே, அரிசனக் காலனிகள் கட்டப்பட்டு இடையிலே பராமரிப்பு எதுவும் இல்லாத நிலைமையில் விடப் பட்டுவிடுகின்ற காரணத்தினால் பாழடைந்து விடுகின்றன, கட்டப்பட்டுக் கொடுத்தாலும் அவைகளைப் பராமரித்தால்தான் அவைகள் நீண்ட காலத்திற்கு நீடித்திருக்கும். எனவே கட்டப்பட்ட வீடுகள் எவை எவை பராமரிக்கப்பட வேண்டிய நிலைமையில் இருக்கின்றன என்பதைக் கண்டறிய அரசு ஒரு குழுவை நியமித்து அப்படிப்பட்ட வீடுகளையெல்லாம் பழுதுபார்த்துக் கொடுக்குமா ?